08.11.2017

தி இந்து
தமிழால் இணைவோம்

# இலவசமாக சின்ன வெங்காய விதைகள்: உற்பத்தியை அதிகரிக்க தோட்டக்கலைத் துறை புது ஏற்பாடு

சின்ன வெங்காயம் கிலோ ரூ.120 வரை விற்பதால் அதன் சாகுபடி பரப்பை அதிகரிக்க அனைத்து மாவட்ட தோட்டக்கலைத் துறைக்கு தமிழக அரசு சுற்றறிக்கை அனுப்பி உத்தரவிட்டுள்ளது. அதற்காக இலவச விதை வெங்காயமும் அனுப்பி விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

தமிழகத்தில் சின்ன வெங்காயம் விலை வரத்து குறைவால் ஒரு கிலோ ரூ.120 வரை விற்கிறது. அதனால், பொதுமக்கள் பெரும்பாலும் சின்ன வெங்காயம் வாங்குவதில்லை. அதற்கு பதிலாக மக்கள் பெரிய வெங்காயத்தை வாங்கி பயன்படுத்த பழகிவிட்டனர். கிட்டத்தட்ட கடந்த 6 மாதங்களுக்கும் மேலாக சின்ன வெங்காய விலை குறையாமல் இருப்பதால் தோட்டக்கலைத் துறையினர் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

தற்போது மழை பெய்து வருவதால் சின்ன வெங்காயம் சாகுபடிக்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது. அதனால், தமிழக அரசு தற்போது அனைத்து மாவட்ட தோட்டக்கலைத்துறை இணை, துணை இயக்குநர்களுக்கு சின்ன வெங்காயம் சாகுபடியை அதிகரிக்க, தேவையான ஆலோசனை திட்டங்களை அனுப்பி வைக்குமாறு சுற்றறிக்கை அனுப்பி வைத்துள்ளது.

**உயர்ந்து வரும் விலை**

இதுகுறித்து மதுரை மாவட்ட தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் பூபதி கூறியதாவது:

திண்டுக்கல், சேலம், விழுப்புரம், ஈரோடு, பெரம்பலூர், அரியலூர், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் சின்ன வெங்காயம் அதிகமாக விளைவிக்கப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை பொய்த்துவிட்டதால் சின்ன வெங்காயம் சாகுபடி முற்றிலும் குறைந்தது.

சின்ன வெங்காயத்தை பொறுத்தவரையில் இயற்கையாகவே விளையும் விளைநிலங்களில் மட்டுமே சாகுபடி செய்யப்படும். மற்ற இடங்களில் சாகுபடி

செய்தாலும் எளிதாக வராது. வழக்கமான சாகுபடி இடங்களிலும் சாகுபடியை மேலும் அதிகரிக்க நினைத்தால் மழை கைகூடவில்லை. அதனால், சாகுபடி பரப்பு குறைந்து உற்பத்தியில்லாமல் விலை உயர்ந்துகொண்டே செல்கிறது.

தற்போது வடகிழக்கு பருவமழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் தமிழக அரசு சின்ன வெங்காயம் சாகுபடியை அதிகரிக்க திட்டங்களை தயாரித்து அனுப்புமாறு தெரிவித்துள்ளது. மதுரை மாவட்டத்தில் டி.கல்லுப்பட்டி, திருமங்கலம், சேடபட்டி பகுதியில் சின்ன வெங்காயம் ஆயிரம் ஏக்கரில் நடக்கிறது. தற்போது 1,500 ஏக்கராக சின்ன வெங்காயம் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், தேசிய தோட்டக்கலை திட்டத்தில், 400 ஹெக்டேருக்கான இலவசமாக விதை வெங்காயம் வாங்கி விவசாயிகளுக்கு கொடுத்துள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## வெங்காய சேமிப்பு கிடங்குகள் தயார்

பூபதி மேலும் கூறியது: கடந்த ஆண்டுவரை விவசாயிகள், வெங்காயத்தை விதை வெங்காயமில்லாமல் வெங்காயத்தைப் பிரித்து பிரித்து நடுவர். இந்த ஆண்டு சின்ன வெங்காயத்துக்கென்று தனி விதைகளை மாவட்டத்தில் அறிமுகம் செய்துள்ளோம். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வீரிய ஒட்டு ரகம் கோவை-5 மற்றும் டெய்லர் ஆகிய சின்ன வெங்காயம் விதை ரகங்களை பரிந்துரை செய்துள்ளோம். இதற்காக 600 கிலோ விதைகள் வாங்கி விவசாயிகளுக்கு இலவசமாக முழுமானியத்தில் விநியோகம் செய்துள்ளோம்.

அதனால், இன்னும் ஒரு சில மாதங்களில் 1,500 ஏக்கரில் சின்ன வெங்காயம் உற்பத்தியாக வாய்ப்புள்ளது. இதேபோல், தமிழகம் முழுவதும் சின்ன வெங்காயம் உற்பத்தியானால் வரத்து அதிகரித்து விலை குறையும். ஒரு ஹெக்டேருக்கு 8 கிலோ விதை வெங்காயம் போதும். சின்ன வெங்காயம் அதிகமாக உற்பத்தியானால் விலை குறையும் என அச்சப்படத் தேவையில்லை. அதற்காக சின்ன வெங்காயத்தை சேமித்து வைத்து விற்க சேமிப்பு கிடங்குகள் ஏற்பாடு செய்துள் ளோம் என்றார்.

## 40 ஆண்டுகளில் இல்லாத விலை உயர்வு: சின்ன வெங்காயத்தின் விலை கிலோ ரூ.180-ஐ தொட்டது



திண்டுக்கல்லில் சின்ன வெங்காயத்தை தரம் பிரிக்கும் தொழிலாளர்கள்.

தமிழகத்தில் திண்டுக்கல், திருப்பூர், நாமக்கல், கோயம்புத்தூர், ஈரோடு, தேனி மாவட்டங்களில் அதிக அளவில் சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக வறட்சியால் சின்ன வெங்காய விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதனால் பட்டறையில் சேமித்து வைத்திருந்த சின்ன வெங்காயம், வெளி மாநில வெங்காயத்தை கொண்டு வந்து சில மாதங்களுக்கு முன்பு வெளி மார்க்கெட்டில் கிலோ விலை ரூ.100 வரை விற்பனை செய்தனர்.

திண்டுக்கல் வெங்காய கமிஷன் மண்டிக்கு திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் தலா 4 ஆயிரம் சின்ன வெங்காய மூட்டைகள் வந்து இறங்கும். கடந்த 2 ஆண்டுகளாக, வறட்சியால் வரத்து பாதியாக குறைந்தது. சில மாதங்களாக வரத்து மேலும் குறைந்து, ஆயிரம் மூட்டை வெங்காயம் மட்டுமே வந்தது.

தற்பொழுது சில நாட்களாக சின்ன வெங்காயம் வரத்து 700 மூட்டைகளாக குறைந்தது. இதனால் விலை படிப்படியாக உயர்ந்து, தற்போது மொத்த

மார்க்கெட்டிலேயே ரூ.150 முதல் ரூ.160 வரை விற்கிறது. இதை வாங்கிச் செல்லும் வியாபாரிகள் போக்குவரத்து செலவு, லாபம் என கணக்கிட்டு கிலோ ரூ.180 வரை விற்கின்றனர்.

இதுகுறித்து விவசாயி பாத்திமா ராஜரத்தினம் கூறியதாவது: குறைந்தபட்சம் கிலோ ரூ.130-க்கு விதை வெங்காயம் வாங்கி நடவு செய்து உரமிட்டு தண்ணீர் பாய்ச்சி 3 மாதம் கழித்து அறுவடைக்கு வரும்போது, வெங்காய விலை அதிகமாக இருக்கும் என்பதற்கு உத்திரவாதமில்லை.

தெரிந்தே நஷ்டப்பட தயார் இல்லாததால் விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்தால் மட்டுமே விலை குறைய வாய்ப்புள்ளது என்றார்.

‘கடந்த 40 ஆண்டுகளில் இதுபோன்ற விலை உயர்வை பார்த்ததில்லை. தை மாதம் வரை விலை குறைய வாய்ப்பில்லை. வரத்து மேலும் குறையும் பட்சத்தில் கிலோ ரூ.200-ஐ தொட வாய்ப்புள்ளது’ என்று வியாபாரிகள் கூறினர். இந்நிலையில், அமைச்சர் செல்லூர் கே.ராஜூ சென்னையில் கூறியது: விலையை குறைக்க கூடுதலாக கொள்முதலுக்கு நடவடிக்கை எடுக்கப்படும். சின்ன வெங்காயத்தை வெளிமாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்ய ஆலோசிக்கப்படுகிறது என்றார்.

## அந்தமான் அருகே புதிய காற்றழுத்த தாழ்வு நிலை: தமிழகம் புதுச்சேரியில் மழை நீடிக்கும் - வானிலை மையம் தகவல் நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு தீவிரம்



சென்னையில் விட்டுவிட்டு மழை பெய்து வருகிறது. இதனால் சாலைகளில் நீர் தேங்கியுள்ளது. பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் குளம்போல் தேங்கியுள்ள மழைநீரில் சிரமத்துடன் செல்லும் வாகனங்கள். - படம்: ம.பிரபு

அந்தமான் கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியிருப்பதால் தமிழகம், புதுச்சேரியில் மழை நீடிக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்தமிழகத்தில் அனேக இடங்களிலும், வடதமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களிலும் மிதமான மழை பெய்யும். தென் தமிழகத்தில் ஒருசில இடங்களில் கனமழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை கடந்த 26-ம் தேதி தொடங்கியது. தொடக்கத்திலேயே தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்யத் தொடங்கியது. தென்மேற்கு வங்கக் கடலில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் கடலோர மாவட்டங்களிலும் புதுச்சேரியிலும் கடந்த வாரம் கனமழை பெய்தது. அதைத் தொடர்ந்து இலங்கை அருகே வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலையால் மழை தொடர்ந்தது.

கடந்த 10 நாட்களுக்கும் மேலாக விட்டுவிட்டு கனமழை பெய்து வருவதால் தமிழக கடலோர மாவட்டங்களில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக நாகை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களிலும் கடலூர் மாவட்டத்திலும் மழை வெள்ளத்தால் பல ஆயிரம் ஏக்கரில் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களிலும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. தாழ்வான பகுதிகளில் குடியிருப்புகளை தண்ணீர் சூழ்ந்தது.

இதையடுத்து, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை அரசு முடுக்கிவிட்டது. அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் பல இடங்களில் மழை நீர் உடனடியாக வெளியேற்றப்பட்டது. மழை காரணமாக கடந்த ஒரு வாரமாக பள்ளிகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது.

மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதாரத் துறை சார்பில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. நடமாடும் மருத்துவக் குழுக்களும் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சென்னை, புறநகர் பகுதிகளில் மழை வெள்ள பாதிப்புகளை முதல்வர் கே.பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள் பார்வையிட்டு நிவாரண உதவிகளை வழங்கினர்.

இதற்கிடையே, நேற்று முன்தினம் சென்னை வந்திருந்த பிரதமர் மோடியிடம் மழை வெள்ள பாதிப்புகள் குறித்து முதல்வர் விளக்கினார். மேலும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் மழை வெள்ள பாதிப்புகளுக்கு நிரந்தர தீர்வு காண ரூ.1,500 கோடி நிதி வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில், புதிய காற்றழுத்த தாழ்வு நிலை மற்றும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகம் முழுவதும் நேற்றும் பரவலாக மழை பெய்தது. இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலச்சந்திரன் கூறியதாவது:

இலங்கையை ஒட்டி தென்மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை வலுவிழந்துள்ளது. தற்போது தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதையொட்டியுள்ள தெற்கு கேரளப் பகுதியில் வளிமண்டலத்தில் மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால் ஈரப்பதம் மிகுந்த காற்று கிழக்கு திசையில் இருந்து தமிழகம் வழியாகச் செல்கிறது.

அதேநேரம், அந்தமான் கடல் பகுதியில் புதிதாக காற்றழுத்த தாழ்வுப் பகுதி ஒன்று உருவாகியுள்ளது. இது, அடுத்த 48 மணி நேரத்தில் சற்று வலுப்பெறக்கூடும். கடந்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் பரவலாக மழை பெய்துள்ளது.

அடுத்த 24 மணி நேரத்தில் தென் தமிழகத்தில் அனேக இடங்களிலும் வட தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களிலும் மிதமான மழை பெய்யும். தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது. சென்னையைப் பொறுத்தவரை இடைவெளிவிட்டு மிதமான மழை பெய்யும். இவ்வாறு அவர் கூறினார்.

தமிழகத்தில் மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. பேரிடர் மீட்புக் குழு தயார் நிலையில் உள்ளது. நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வருவாய்த் துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தெரிவித்துள்ளார். ஆக்கிரமிப்பாளர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டு வருகிறது.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி வரையான கடந்த 24 மணி நேரத்தில் தலைஞாயிறில் 8 செமீ, திருப்பூண்டியில் 7 செமீ, கோத்தகிரி, நீடாமங்கலத்தில் தலா 5 செமீ, பாபநாசம் (நெல்லை மாவட்டம்), நாகப்பட்டினம், குன்னூரில் தலா 4 செமீ, பரங்கிப்பேட்டை, தரமணி, பெரியார் (தேனி), திருத்துறைப்பூண்டி, திருவாரூர், குடவாசல், அம்பாசமுத்திரம், பொன்னேரி, சத்தியமங்கலம், எண்ணூர், குழித்துறையில் தலா 3 செமீ மழை பதிவர்னது. தாம்பரத்தில் 2 செமீ, சென்னை மீனம்பாக்கம், நுங்கம்பாக்கத்தில் தலா 1 செமீ மழை பதிவாகியிருக்கிறது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.